## தொகுதி 1

*[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்]*

**பாகம் - ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

புத்தம் புதிய புத்தகத் தினிலே
என்னிடம் பறித்த எழுது கோலால்
என்மகன் ஏதோ எழுத லுற்றான்!
காற்றொடு காற்றாய்க் கடலொடு கடலாய்ப்
பூவொடு பூவாய்ப் புனலொடு புனலாய்
ஒன்றிப் பாட்டாய் உணர்வின் எல்லையில்
நின்றிவ் **வுலகை மறந்த வேளையில்**
பிள்ளைப் பாசமா பிறக்கும்? உடனே
விரைந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கினேன்;
தூவலைப் பற்றித் தொடர்ந்தேன் பணியை.

\- **முரசு நெடுமாறன்**

**1.** இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது?
(2 *புள்ளி*)

**2.** இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **ஓசைநயங்கள்** இரண்டனை எழுதுக.
(4 *புள்ளி*)

**3.** i) **'உலகை மறந்த வேளையில்'** என்பதன் பொருள் யாது? (2 *புள்ளி*)

நின்றிவ் வுலகை மறந்த வேளையில்
பிள்ளைப் பாசமா பிறக்கும்? உடனே
விரைந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கினேன்;
தூவலைப் பற்றித் தொடர்ந்தேன் பணியை.

ii) இவ்வடிகளில் கவிஞர் **விரைந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கியதற்கான காரணம்** என்ன? (2 *புள்ளி*)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. பிசிராந்தையார் நாடக ஆசிரியர் **ஈடுபட்ட துறைகளுள்** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

5. i. பிசிராந்தையார் நாடகத்தில் இடம்பெற்றுள்ள **துணைக் கதைப்பாத்திரங்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii. பிசிராந்தையார் நாடகத்தின் **உத்திமுறை** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | | |
|---|---|---|
| பிசிராந்தையார் | : | வருக மேற்படியாரே! என்ன வரவர மேற்படியார் கீழ்ப்படியாராகி விட்டார். காலையில் வரும்படி சொன்னேன். கீழ்ப்படிந்தாரா? |
| மேற்படியார் | : | **வரும்படியிருந்தால்தானே வரும்படியாய் இருக்கும்**. என் குழந்தை சோறு கேட்டான். மனைவி இல்லையென்றாள். இரும்படி உன் நெஞ்சம் என்றேன். ஒரு பணம் தரும்படி கேட்டாள். அரிசி வாங்க வரும்படியிலிருந்தால் தானே! திரும்படி உன் ஆத்தாள் வீட்டுக்கு என்றேன். பெரும்படி வருந்தினாள். அங்கிருக்க முடியவில்லை. இங்கு வரும்படி நேர்ந்தது. |
| பிசிராந்தையார் | : | அரிசி வாங்க ஒரு பணமா இல்லை! சிரிக்க வைத்து என்னை இன்பத்திற் சேர்க்கும் நீவிர் இப்போது அழ வைத்துத் துன்பத்திற் சேர்த்தீர். முதலில் இதைக் கொண்டு போய் மனைவி மக்களின் பசித்துன்பத்தைப் போக்கி வர வேண்டும். *(மார்பின் கல்லிழைத்த பதக்கத் தொங்கலைக் கழற்றி மேற்படியார் கையில் கொடுக்க அவர் வாங்கிக் கொள்கிறார்.)* |
| மேற்படியார் | : | *(மற்றப் புலவர்களைப் பார்த்து நகைத்து)* இதைக் கொண்டு போய் வீட்டில் வைத்துவிட்டு வந்து விடுகிறேன். |
| புலவர் க | : | அப்படியானால் பணமில்லை அரிசியில்லை என்றதெல்லாம் பச்சைப் புளுகுதானா? |
| | | (காட்சி 1, பக்கம் 3 & 4) (உமா பதிப்பகம் 2020) |

i) இச்சூழலில் வெளிப்படும் பிசிராந்தையாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) இச்சூழலில் காணப்படும் **மொழிநடை** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

iii) **"வரும்படியிருந்தால்தானே வரும்படியாய் இருக்கும்"** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 புள்ளி]

**பிரிவு மூன்று : நாவல்**

7. வாடா மலர் நாவலாசிரியரின் **அடையைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

8. i) வாடா மலர் நாவலில் எளிய வாழ்வைப் போற்றிய **இருவரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **உச்சம்** யாது? (2 *புள்ளி*)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

திடீரென்று என் மனத்தில் ஒருவழி பிறந்தது. அவனை அழைத்துக் கொண்டு சமையல் அறைக்குச் சென்றேன். என் தாயிடம் நடந்ததைச் சொன்னேன். "இந்தக் காயை நம் வீட்டுக்கு வைத்துக் கொள்ளலாம் அம்மா. இதற்குக் காசு கொடுத்து விடுவோம். காசை எடுத்துக் கொண்டு போய் இவன் வேறு வாங்கி விடுவான்," என்றேன்.

என் தாய் பேசாமல் பெருமூச்சு விட்டுத் தானப்பனின் கையில் மூன்றணா கொடுத்தாள். **உடனே அவன் முகம் மலர்ந்தது.** மறுபடியும் கடைக்கு வருமாறு என்னை அழைத்தான். "இப்போது நீ மட்டுமே போய் நல்லதாகப் பார்த்து வாங்கிக் கொண்டு வா" என்று அவனை அனுப்பிவிட்டேன்.

என் தாய் அப்போதும் ஒன்றும் பேசாமல் வேலையில் ஈடுபட்டாள்.

"என் மேல் கோபமா அம்மா?" என்று கேட்டேன்.

புன்முறுவலோடு என்னைப் பார்த்தாள். "நீ நல்லதுதான் செய்தாய். ஆனால், அவனுடைய சித்திக்கு நல்ல மனம் இல்லையே. என்ன செய்வது?" என்றாள்.

(அத்தியாயம் 3, பக்கம் 31 & 32)
(மல்டி எடுகேஷனல் புக் எண்டர்பிரைஸ் 2020)

i) இச்சூழலில் வெளிப்படும் குழந்தைவேலின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) இச்சூழலின் **இடப்பின்னணியை** எழுதுக. (2 *புள்ளி*)

iii) **'உடனே அவன் முகம் மலர்ந்தது'** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 புள்ளி]

## பாகம் – இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை

**நாளை நமதே!**

தென்றல் விளையாடும் சோலை வனமெங்கள்
        தேசமென்றே ஒன்றாய்க் கூடுங்கடி
குன்றினில் நின்றாடுங் கோல மயிலெனக்
        கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி

தோட்டப் புறத்தினில் தொட்ட இடத்தினில்
        நொய்வமும் செம்பனை ஈயமெலாம்
பாட்டன் வியர்வை நீர் பட்ட சிறப்பென
        பாடுங்கடி பாடி ஆடுங்கடி

பத்து மலையினில் கொட்டும் மழையென
        பார்க்க வருகின்ற கூட்டமெலாம்
முத்துக் கலையினில் மோகம் அடைந்ததால்
        முல்லை மலர்களே கொட்டுங்கடி

முத்து மணித்திரள் மூழ்கி எடுத்தவர்
        முன்னுரை வாழ்வெனக் கொட்டுங்கடி
முத்திரையிட்டவர் மூத்த குடியினர்
        முத்தமிழர் என்றே கொட்டுங்கடி

வட்ட நிலவினில் பட்ட கறையென
        வாழ்க்கை யமைந்தது பாருங்கடி
வெட்ட வெளியினில் பட்ட மரமென
        வேரற்றுப் போனதேன் கூறுங்கடி

நாளை வருங்காலம் நம்மவர்க்கே என்று
        நம்தமிழ்ப் பெண்களே கொட்டுங்கடி
வேளை வருமென்று வீணில் உறங்காமல்
        வீறுகொண்டே கும்மி கொட்டுங்கடி!

- **கவிஞர் காசிதாசன்**

10 மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக.

[20 புள்ளி]

அல்ல

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**காலம் பறக்குதடா!**

காலம் பறக்குதடா! - தமிழா
வாழப் பறந்திடடா!
கோளம் வலம்வரவே - உலகம்
கோலம் புனையுதடா!
நாளும் நடக்கையிலே - புதுமை
நாடிப் பெருகுதடா!
வாழும் வகைகளிலே - வளங்கள்
வந்து குவியுதடா!

நேற்றுத் திருந்தியவர் - உன்னை
நோக்கிப் பழகியவர்
ஊற்றுப் பெருக்கெனவே - இன்பம்
ஊறத் திளைக்கின்றார்!
காற்றுக் கிடையினிலே - அலை
கத்தும் கடலினிலே
ஆட்டம் நடத்துகின்றார்! - நீயேன்
ஆழக் கிணற்றிலுள்ளாய்?

நாளும் முழங்குகின்றாய் - அந்த
நாளில் இருந்ததெல்லாம்!
காலப் பயனறியாய்! - உய்வைக்
காணும் கடன் மறந்தாய்!
பாழும் பிரிவினைகள் - வளர்த்தே
பாதை தவறிவிட்டாய்!
மீளும் வகைமொழிவார் தம்மொடும்
மோதிக் கெடுத்திடுவாய்!

ஒன்றிச் செயல்புரிந்தால் - நாம்
உச்சிக் குயர்வோமென
ஒன்றி முறைவகுப்பாய்! - சின்னாள்
சென்று நிலையறிந்தால்
என்றும் இருந்ததுபோல் - இருப்பாய்
ஏதும் செயல்புரியாய்!
என்றிங் குயர்வதடா! - தமிழா
எண்ணிச் செயல்தொடடா!

\- **கவிஞர் கருதிருவரசு.**

i) இக்கவிதையில் காணப்படும் **நயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) இக்கவிதையின் **படிப்பினைகள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

12 பிசிராந்தையார் நாடகத்தின் **அறிவுடைநம்பி என்றென்றும் மக்களின் மனத்தில் இடம்பெற்றவன்**. இக்கூற்றை விளக்கி எழுதுக. [20 புள்ளி]

அல்லது

13 பிசிராந்தையார் நாடகத்தின் **கதைப்பின்னலை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

14 i) வாடா மலர் நாவலில் சுடர்விழியின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **பின்னணிகள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

அல்லது

15 i) வாடா மலர் நாவலில் பூங்கொடியின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **மொழிநடைகள்** மூன்றனை விளக்குக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

**முற்றுப் பெற்றது**
**SOALAN TAMAT**